**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,</u>**
**<u>SIRKALI</u>**
**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**<u>Case No. C.C. No. 250/2021</u>**

| | | | |
|---|---|---|---|
| Deposition of | | Prosecution: P.W-3, L.W-3 | |
| Name | : Selvamani | Defence | : |
| Father Name | : Pazhanivel | Court | : |
| Village | :Punjai | Taluk | :Sirkali |
| Calling | : | Religion | : |
| Age | :41/2022 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 17.06.2022.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது புஞ்சை வடக்கு வீதியில் வகிக்கிறேன். அ.சா. 1 மற்றும் அ.சா. 2 யை தெரியும். அ.சா.,1 செம்பனார்கோயில் வட்டார கல்வி அலுவலாராக பணிப்பரிந்தார். அப்போது எனது அப்பாவின் ஆசிரியர் பணிக்கான ஓய்வுதியம் சம்பந்தமாக ஒரு மாதமாக அ.சா. 1 யை பார்த்து வருகிறேன் .எதிரியை தெரியாது. சம்பவத்தன்றுதான் தெரியும்.. கடந்த 24.06.2021 ம்தேதி இரவு 7 மணிக்கு மேற்படி ஓய்வுதியம் சம்பந்தமாக அ.சா.1 யை பார்க்க சென்றபோது எதிரி அ.சா. 1ன் வீட்டு ஓரத்தில் உள்ள பாக்குமரத்தை வெட்டிவிட்டு கொச்சையான வார்த்தைகளால் அ.சா.1 யை திட்டிக்கொண்டிருந்தார். அ.சா. 1ன் வீட்டில் உள்ள வேலையாள் எதிரியிடம் சென்று கேட்டதற்கு அவரை அ.சா.1 யை வரச்சொல் என்று கூறியுள்ளார். பின்னர் அ.சா. 1 வந்து கேட்டதற்கு அரிவாளால் அ.சா. 1ன் கழுத்தில் அழுத்தி வைத்திருந்தார் . அதை அ.சா. 1 தடுக்கவே அவரது இரு கைளிலும் உள்ள கைவிரல்களில் இடையே இரத்த காயம் ஏற்பட்டது. பின்னர் எதிரி அ.சா.1ன் தலையை வெட்டி இலையில் வைத்து விடுவதாக மிரட்டினார். பின்னர் அ.சா. 1 மேற்படி சம்பவம் தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் என்னையும் விசாரித்தார்கள்.

**எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர் இல்லை என்பதால் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.